# யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி
# பரிசளிப்பு விழா – 2012

இடம் :- சிவபாதசுந்தரம் மண்டபம்

காலம் :- 2014.01.12 – ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- காலை 9.00 மணி

**தலைவர்**

திரு.க.மு.கனகலிங்கம்
*(கல்லூரி முதல்வர்)*

**பிரதமவிருந்தினர்**

**கௌரவ கல்வி அமைச்சர் உயர்திரு த.குருகுலராஜா**
***(கல்விஇ பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு, வடமாகாணம்)***

**கௌரவ விருந்தினர்**

**உயர்திரு சி.நந்தகுமார்**
***(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சிக் கல்வி வலயம்)***

**நிறுவுநர் உரை**

**கலாநிதி சி.விஜயகுமார்**
***(சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, யாழ் பல்கலைக் கழகம்)***

**பரிசில் வழங்கல்**

**திருமதி சித்திரா குருகுலராஜா**

## மகுட வாசகம்

உண்மை வெல்லும்

## கல்லூரியின் பணிக்கூற்று

எம்மை நாடி வரும் மாணவர் சமுதாயத்தை உள்வாங்கி அவர்களது தேர்ச்சிகளை மேலும் விருத்தி செய்வதே எமது பணிக்கூற்று ஆகும்.

## கல்லூரியின் தொலைநோக்கு

மாறிவரும் உலகுக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி அதனை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் சமுதாயத்தை தோற்றுவித்தலே எமது தூர நோக்கு ஆகும்.

## விக்னேஸ்வரக் கல்லூரியின் 2012ம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கை

அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய இன்றைய முதன்மை விருந்தினர் கௌரவ கல்வி அமைச்சர் உயர்திரு த.குருகுலராஜா அவர்களே, அவர்தம் பாரியார் அவர்களே, இவ்விழாவில் கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய வடமராட்சிக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் உயர்திரு சி.நந்தகுமார் அவர்களே, வணக்கத்திற்குரிய மதகுருமார்களே, நிறுவுநர் உரையை ஆற்ற வருகை தந்திருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவனும் யாழ் பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி.விஜயகுமார் அவர்களே, எமது வலயக் கல்வி அலவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக்கல்விப்பணிப்பாளர்களே,கோட்டக்கல்வி பணிப்பாளர் அவர்களே, சகோதர பாடசாலை அதிபர்களே, பழைய மாணவர் சங்கத் தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே, பாடசாலை மேம்பாட்டுக்காக பற்றுறுதியுடன் செயற்படும் பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, பாடசாலைஅபிவிருத்திச் சங்க செயலாளர் அவர்களே, உறுப்பினர்களே, அன்பார்ந்த பெற்றோர்களே, எமது கல்லூரியின்முன்னாள்ஆசிரியர்களே,தற்போதையஆசிரிய சகோதர சகோதரிகளே, கல்விசாரா ஊழியர்களே, அன்புக்குரிய மாணவச் செல்வங்களே அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கங்கள்.

வடமராட்சி வலயத்தில் முன்னனிப் பாடசாலைகளில் ஒன்றாகவும் இசுறு (Isuru School) பாடசாலையாகப் பரிணமித்து ஆயிரம் பாடசாலைத் திட்டத்தினுள் செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமது கல்லூரியின் மரபுக்கமைய கல்லூரி அதிபர் என்ற வகையில் அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமா்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். .

முன்னைநாள் அதிபர் திரு.வே.சிவசிதம்பரம் அவர்களின் ஓய்வை அடுத்து 2012 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கல்லூரியை பொறுப்பெடுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் எனது முதலாவது அறிக்கை இதுவாகும்.

96வருடகால வரலாற்றைக் கொண்டு நூற்றாண்டை அண்மித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது கல்லூரித்தாயின் மேம்பாட்டுக்காக ஆரம்பகாலம் முதல் இன்றுவரை தம்மை அர்ப்பணித்து பணிபுரிந்த ஸ்தாபகர், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆகியோரை நினைவு கூருவதுடன் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் வடமராட்சியின் முன்னனிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் வகையில் ஒன்றுபட்டு உழைப்போம் என இந்த நன்நாளில் உறுதி பூணுவோமாக.

மேலும் இச்சந்தர்ப்பத்தில் எமது கல்லூரியின் பழைய மாணவனும் முன்னாள் அதிபருமான திரு வ.செல்வராஜா அவர்கள் வலயக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி இன்று மாகாணக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்பது எமக்கெல்லாம் பெருமையளிக்கின்றது. அவருக்கு கல்லூரிச் சமூகம் சார்பாக எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறிக்கொள்கின்றோம். இச்சபையில் 2012ம்ஆண்டுக்கான எமது கல்லூரித்தாயின் செயற்பாடுகளையும் ஆசிரிய, பௌதிகவளத் தேவைகளையும் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது என நினைக்கின்றேன்.

### ஆசிரிய ஆளணி விபரம் - 2012

| | |
|---|---|
| விஞ்ஞானப்பட்டதாரி | - 07 |
| கலைப்பட்டதாரி | - 16 |
| வணிகப்பட்டதாரி | - 04 |
| பயிற்றப்பட்டோர் | - 18 |

## 2012ம் ஆண்டு இடமாற்றலாகி வந்தோர்

1. திரு. மு.கனகலிங்கம் (அதிபர்)
2. திரு. சி.கௌசிகன் (உடற்கல்வி)
3. திரு. வே.பகீரதன் (கணக்கீடு)
4. திரு .பா.உமாகரன் (விஞ்ஞானம்)
5. திரு .த.விஜயசங்கர் (அளவையியல்)
6. திரு. அ.பவானந்தன் (சமூகக்கல்வி)
7. திருமதி .உ...சந்திரகுமார் (பொருளியல்)
8. திருமதி. சு.கிசோதரன் (தற்காலிகம் ICT))
9. திருமதி .ரா.வாசுதேவன் (புதிய நியமனம் ICT)
10. திரு. இ.சிவஞானம் (பௌதிகவியல்)
11. திருமதி .க.குகானந்தன் (இரசாயனவியல்)
12. திருமதி. ர.ஸ்ரீகண்ணன் (தமிழ்)
13. திருமதி. க.தெய்வேந்திரராஜா (வணிகக்கல்வி)
14. திருமதி. ஜெ.செல்வமோகன் (சங்கீதம்)
15. திருமதி. க.குமரன் (உயிரியல்)
16. திருமதி. நி.கேதீஸ்வரன் (சைவநெறி)
17. திரு. இ.சுரேஸ்குமார் (ஆங்கிலம் தற்காலிக இணைப்பு)

## இடமாற்றம் பெற்று சென்றோர்

1. திரு. மு.செல்வச்சந்திரன் (விஞ்ஞானம்.-ஆங்.மொழி.மூலம்)
2. செல்வி. சா.சூரியமூர்த்தி (கணிதம் -ஆங்.மொழி.மூலம்))
3. திரு. இ.பிரபோசங்கர் (ஆங்கிலம்)
4. செல்வி. சி.கேமலதா (சமூகக்கல்வி)
5. திருமதி. ப.கலைச்செல்வன் (சமூகக்கல்வி)
6. திரு. தி.சிவந்தன் (சித்திரம்)
7. திரு. சோ.கங்காதரன் (வழிகாட்டல் ஆலோசனை)
8. திரு .தி.முருகதாஸ் (விஞ்ஞானம்)
9. செல்வி. சி.தமயந்தி (அரசியல் விஞ்ஞானம்)

10. திரு. சி.இரங்கநாதன் (கணக்கீடு)

11. திரு. வ.தயாபரன் (இணைந்தகணிதம்)

12. திரு. வே.பரமேஸ்வரன் (இரசாயனவியல்)

13. திரு. கு.உதயமூர்த்தி (இணைந்தகணிதம்)

14. திருமதி. நா.கணபதிப்பிள்ளை (தமிழ்)

15. திருமதி .ந.சண்முகதாசன் (பௌதீகவியல்)

16. திருமதி. வ.கிருஸ்ணயோகன் (வணிகக்கல்வி)

17. திருமதி. மை.சிறீஸ்கந்தசேகரம் (உயிரியல்)

18. .திருமதி. ஜெ.கௌசிகன் (சங்கீதம்)

## ஓய்வு பெற்றோர்

**2002ல் இருந்து 2012 வரையான** பத்து வருட காலப்பகுதியில் அதிபராக இருந்து சிறப்பான சேவையாற்றிய அதிபர் திரு.வே.சிவசிதம்பரம் அவர்கள் 04.07.2012ல் ஓய்வு பெற்றுள்ளார். வடமராட்சி வலயத்தில் ஒரேயொரு **"இசுறு"** பாடசாலையாக எமது பாடசாலை உள்வாங்கப்படுவதற்கு முன்நின்று துணிச்சலுடன் செயற்பட்டவர் அதிபர் சிவசிதம்பரம் அவர்கள் ஆவார். இவரது அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவித்து பாடசாலைச் சமூகம் பெருவிழா எடுத்தது. இவ்விழாவில் மாகாணக் கல்விச் செயலர் ,மாகாணக் கல்விப் பணிப்பாளர் என கல்விப்புல உயர் குழாத்தினர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. அதிபர் அவர்களின் ஓய்வுகாலம் மகிழ்ச்சியாகவும், சிறப்பாகவும் அமைய கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

## மாணவர் பரம்பல் - 2012

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6-11 | 266 | 213 | 479 |
| 12-13 | 128 | 118 | 246 |
| மொத்தம் | 394 | 331 | 725 |

## க.பொ.த(சா/த)ப் பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு – 2012

**தமிழ்மொழி மூலம்**

| பாடம் | தோற்றியோர் | சித்தி % |
|---|---|---|
| சைவசமயம் | 75 | 100.0 |
| கத்தோலிக்கம் | 04 | 100.0 |
| கிறிஸ்தவம் | 01 | 100.0 |
| தமிழ் | 80 | 86.2 |
| ஆங்கிலம் | 80 | 30.0 |

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | 80 | 57.5 |
| கணிதம் | 80 | 65.0 |
| வரலாறு | 80 | 57.5 |
| வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் | 24 | 91.6 |
| புவியியல் | 06 | 100.0 |
| குடியுரிமைக்கல்வி | 23 | 100.0 |
| முயற்சியாண்மைக்கல்வி | 27 | 70.3 |
| கர்நாடக சங்கீதம் | 09 | 100.0 |
| சித்திரம் | 10 | 90.0 |
| பரதநடனம் | 06 | 100.0 |
| தமிழ் இலக்கியநயம் | 30 | 86.6 |
| நாடகமும் அரங்கியலும் | 19 | 100.0 |
| ICT | 10 | 100.0 |
| விவசாயம் | 14 | 92.8 |
| கடல்வள தொழில்நுட்பம் | 07 | 100.0 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 49 | 93. |

## க.பொ.த (உ/த)ப் பரீட்சை பெறுபேறு பகுப்பாய்வு – 2012

| பாடம் | தோற்றியோர் | சித்தி % |
|---|---|---|
| பௌதீகவியல் | 15 | 100 |
| இரசாயனவியல் | 15 | 100 |
| இணைந்த கணிதம் | 10 | 80 |
| உயிரியல் | 05 | 100 |
| கணக்கீடு | 11 | 100 |
| வணிகக்கல்வி | 11 | 100 |
| பொருளியல் | 11 | 100 |
| தமிழ் | 35 | 77.1 |
| புவியியல் | 01 | 100 |
| அளவையியல் | 21 | 71.4 |
| இந்துநாகரீகம் | 23 | 100 |
| அரசியல் விஞ்ஞானம் | 07 | 42.9 |
| வரலாறு | 07 | 100 |
| பரதநடனம் | 02 | 100 |
| கர்நாடகசங்கீதம் | 04 | 100 |

## பல்கலைக்கழக அனுமதி - 2012

| துறை | தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|
| கணிதம் | 10 | 08 |
| விஞ்ஞானம் | 05 | 05 |
| வர்த்தகம் | 11 | 11 |
| கலை | 35 | 24 |

## 2012ம் ஆண்டின் சிறந்த பெறுபேறுகள்

### 2012 O/L

### Tamil Medium

| | |
|---|---|
| Panpalagan Nirushan | 8A 1S |
| Luxshana Vasanthakumar | 5A 2B 2C |
| Visshnuha Ravipragash | 4A 1B 3C 1S |
| Sinthuja Jeyabalasingam | 4A 1B 1C 2S |
| Thuvaraka Sriskantharasa | 4A 1B 1C 2S |

### English Medium

| | |
|---|---|
| Printhikka Segasothy | 1A 2B 6C |
| Saththiyalingam Srikrishna | 1A 1B 4C 3S |

### 2012 A/L

| | |
|---|---|
| 1. Suganya Saravanamuththu | 3A (வணிகத்துறை) |
| 2. Sriskanthan Kogulan | 3A (வணிகத்துறை) |
| 3. Selvarasa Suthan | 2A, 1B (வணிகத்துறை) |
| 4. Selvarajah Mayooran | 2A, 1B (கணிதத்துறை) |
| 5. Alageswaran Rajharan | 1A, 2B (விஞ்.துறை) |
| 6. Ushanthy Mahalingam | 1A, 2B (கலைத்துறை) |
| 7. Hemathadsany Sowthararajah | 1A 2B (கலைத்துறை) |
| 8. Nithaarsiny Kailasanathan | 1A 2B ( வணிகத்துறை) |
| 9. Thenmoli Karunakaran | 1A 2B ( வணிகத்துறை) |

### எமது கல்லூரியில் இயங்குகின்ற மன்றங்கள் கழகங்கள்

| மன்றம்/ கழகம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| 1. உயர்தர விஞ்ஞான மன்றம் | திருமதி.ந.சண்முகதாசன் |
| | திருமதி.க.குமரன் |
| 2. உயர்தர வணிக மன்றம் | திருமதி.அ.மோகனராசா |
| | திருமதி.வ.கிருஸ்ணயோகன் |
| 3. உயர்தர தமிழ்மன்றம் | திருமதி.நா.கணபதிப்பிள்ளை |
| | திருமதி.ர.சிறிகண்ணன் |
| 4. உயர்தர மாணவர் மன்றம் | திருமதி.க.குகானந்தன் |
| | திருமதி.க.தெய்வேந்திரராஜா |
| 5. இந்துமாமன்றம் | திருமதி. இ.அபிராமசர்மா |
| | திரு.கோ.கோணரஞ்சன் |
| | செல்வி.இ.இராசையா |

| | |
|---|---|
| 6. கிறிஸ்தவ மன்றம் | திருமதி.ஆ.மே.ஜெ.நாகராசா |
| 7. ஆங்கிலமன்றம் | திருமதி.சா.சிறீகிருஸ்ணன் |
| | திருமதி.ரா.ரகுமாறன் |
| 8. விஞ்ஞானமன்றம் | திருமதி.சு.கிருஸ்ணதாசன் |
| | திருமதி.ஜ.ரவீந்திரன் |
| | திரு .பா.உமாகரன் |
| | திருமதி.தே.இந்திராஜ் |
| 9. தமிழ்மன்றம் | திருமதி.ப.ஸ்ரீவேல்முருகராசா |
| | திருமதி.சி.தனேஸ்வரி |
| 10. விவசாயக்கழகம் | திரு. ம.சசிகரன் |
| | செல்வி. த.மஞ்சுளாதேவி |
| 11. இயற்கை அவதானிப்புக் கழகம் | திருமதி மை.சிறிகந்தசேகரம் |
| | திரு .பா.உமாகரன் |
| 12. . கணனிக் கழகம் | செல்வி. பொ.கைதேகி |
| | திருமதி .ரா.வாசுதேவன் |
| 13 சமூக விஞ்ஞானமன்றம் | திரு.அ.பவானந்தன் |
| | திருமதி.ம.ரவிச்சந்திரன் |
| 14. . அழகியல் மன்றம் | திருமதி.கு.முகுந்தராஜ் |
| | திருமதி.ஜெ.செல்வமோகன் |
| | திருமதி.பு.துஷ்யந்தன் |
| 15. விளையாட்டுக்கழகம் | திரு.சி.கௌசிகன் |
| | திரு.ம.சசிகரன் |
| 16. சாரணியம் | திரு.சி.சிவானந்தப்பிரகாஸ் |
| | திருமதி.ர.சிவசபேசன் |
| | செல்வி.ர.வைகுந்தவாசன் |
| 17. சுகாதாரக் கழகம் | திரு.சி.கௌசிகன் |
| | திருமதி.ஜ.ரவீந்திரன் |
| 18. MOTHER SRILANKA | திருமதி.ஜா.கோபிதாஸ் |
| | திரு.கோ.கோணரஞ்சன் |

மேற்படி மன்றச் செயற்பாடுகள் அவற்றிற்குரிய பொறுப்பாசிரியர்களினால் மாணவர்களின் ஆளுமை விருத்தி, தலைமைத்துவ பண்பு, சிந்தனை ஆற்றல், ஆக்கத்திறன் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் முகமாக சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது.

## ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கம்

| | |
|---|---|
| தலைவர் | திருமதி.சு.கிருஸ்ணதாசன் |
| செயலாளர் | திரு.கு.லோகேஸ்வரன் |

எமது ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கமானது கல்லூரி நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர் நலன்களைப் பேணி இன்ப துன்பங்களில் பங்கேற்பதுடன் கல்லூரி சிற்றுண்டிச்சாலையை நடாத்தி கிடைக்கும் இலாபம் பாடசாலை அபிவிருத்திக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

| | |
|---|---|
| செயலாளர் | திரு.க.ஜெயக்குமார் |
| பொருளாளர் | திரு.தி.கிரிதரன் |

இச்சங்கம் பாடசாலையின் பௌதீக வள தேவையை பூர்த்தி செய்வதிலும் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து வருகின்றது. அந்த வகையில் மாதாந்த தொலைபேசிக் கட்டணம், மின்கட்டணம் என்பவற்றிக்கான மேலதிக செலவினங்களை வழங்கி உதவுகின்றது. மேலும் வருடந்தோறும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர் தினத்தை விமர்சையாக கொண்டாடி பெருமைப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC)

| | |
|---|---|
| தலைவர் | திரு.மு.கனகலிங்கம் (அதிபர்) |
| செயலாளர் | திரு.சி.குணராசா ( பெற்றார்) |
| பொருளாளர் | திரு.இ.சிவஞானம் ( ஆசிரியர்) |

பாடசாலையின் வருடாந்த திட்டமிடல், தேவைகளை இனங்காணல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இக்குழுவானது பாடசாலை மேம்பாட்டுத் திட்ட நடைமுறையை திட்டமிட்டு, அமுல்படுத்தி, மதிப்பீடு செய்து ஏற்ற பரிகார நடவடிக்கை எடுப்பதில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

| | |
|---|---|
| தலைவர் | திரு.S.செல்வரட்ணம் |
| செயலாளர் | திரு.கி.ரவிகுமார் |
| பொருளாளர் | திரு.கி.சுப்பிரமணியம் |

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது. புலமைப்பரிசில் நிதியங்களை உருவாக்கி அதன் மூலம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| **பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம்** | **ரூபா** |
|---|---|
| தொழிலதிபர் ந.பாஸ்கரன் (மருத்துவம்) | 100000.00 |
| அமரர் க.சிவபாதசுந்தரம் ( பொறியியல்) | 100000.00 |
| அமரர் வ.சிவஞானம் ( கலை) | 100000.00 |
| அமரர் ஆ.சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ்ற் சேர்) — நுண்கலை | 100000.00 |
| அமரர் வெ.சபாநாயகம் ( வறுமை நிலை) | 100000.00 |
| பொது நிதியம் ( ஏனையதுறை) | 300000.00 |

அமரர்.சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் நினைவுப் புலமைப்பரிசில் 2008ல் இருந்து (பல்கலைக்கழகம் செல்லும் வசதி குன்றிய மாணவர்களுக்கானது) - 15000.00

அமரர். க.தணிகாசலம் ஞாபகார்த்தம் 5000.00

**வளஅபிவிருத்தி நிதியம்**

| | |
|---|---|
| அமரர்.நா.ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்தம் | 108667.37 |
| பழைய மாணவர் லண்டன் | 45800.00 |
| அமரர் ஆ.சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் | 200000.00 |
| ப.மா.சங்கம் லண்டன் கிளை | 400000.00 |
| ப.மா.சங்கம் கனடா கிளை | 416000.00 |
| ப.மா.சங்கம் கொழும்பு கிளை | 400000.00 |

**பரிசில் வழங்கல் நிதியம்**

அமரர் குவிதா சிவசுதன் ஞாபகார்த்தம் 100000.00

அமரர் கி.ராஜ்குமார் ஞாபகார்த்தம் 100000.00
(கனடா வாழ் அவரது நண்பர்கள் மூலம் மிகவும் வசதி குன்றிய க.பொ.த (சா/த) மாணவருக்கானது)

**வருடாந்தம் கல்வியில் சிறப்பாகச் செய்றபடும் மாணவர் ஒருவருக்கும் விளையாட்டில் சிறப்பாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்குமான கௌரவிப்பு நிதியம் (2012ம் ஆண்டில் இருந்து)**

1. Dr.S.V.தேவேந்திரா - Excellence in sports 150000.00
   (தந்தையார் அமரர் சின்னத்தம்பி வேலாயுதம் ஞாபகார்த்தம்)
2. திரு.K.ரஜீவ் தர்மேந்திரா - Excellence in Acedamic 150000.00
   (தாயார் அமரர் கௌரி மனோகரி குலவரதராஜா ஞாபகார்த்தம்)

## கனடா பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவருமான திரு.சி.அம்பிகாவரன் அவர்களதும் கனடா வாழ் பழைய மாணவர்களதும் முயற்சியால் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் கல்லூரி மாதாவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் "மருத மலர்" சஞ்சிகையை வெளியிடுவது பாராட்டத்தக்கது.மேலும் எமது கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் ரூபா 416000ஐ வள அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி உதவியமை போற்றுதற்குரியது. மேலும் எமது கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் ஆலோசனைகளையும் தந்துதவுவது குறிப்பிடத்தக்கது.

## நன்றிகளும் பாராட்டுக்களும்

எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக பல வழிகளிலும் உதவியோர் பலர் உளர் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருவதுடன் அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றோம்.

1. கல்லூரியை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்கும் - வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகத்தினர்.

2. EKSP மாகாண செயற்திட்ட முகாமையாளர் திரு.S.T.பீரிஸ் அவர்கள்.

3. கல்லூரி வளாகத்தில் சரஸ்வதி சிலை நிறுவுவதற்காக ரூபா 400000/= பண உதவி புரிந்த திரு. K.ரஜீவ் தர்மேந்திரா அவர்கள்.

4. கல்லூரி வளாகத்தில் ஸ்தாபகர் சிலை அமைப்பதற்கு பண உதவி புரிந்த லண்டன் பழையமாணவர் சங்கத்தினர்.

5. கல்லூரித் தேவைக்கென 40 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பு செய்த தொழிலதிபர் ந.பாஸ்கரன் அவர்கள்

6. புதிதாக புனரமைக்கப்பட்ட கேட்போர் கூடத்திற்கான 400 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்த கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர்.

7. சரஸ்வதி சிலையை அழகுற அமைத்து தந்த சிற்பாசாரியார் திரு.பொ.கனகரத்தினம் அவர்கள்

8. ஸ்தாபகர் சிலையை அழகுற வடிவமைத்த திரு.வை.சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்கள்.

9. பல்வேறு புலமைப்பரிசில் நிதியங்களையும் ஏற்படுத்தி உதவும் பழைய மாணவர், நலன்விரும்பிகள்.

10. எமது பாடசாலை மூலம் சஞ்சிகைகளுக்கான விளம்பரங்களை அவ்வப்போது தந்துதவும் நெல்லியடி வர்த்தக சமூகத்தினர்.

இறுதியாக எமது பாடசாலை பல வளங்களையும் பெற்று வடமராட்சி வலயத்தில் வளம் நிறைந்த பாடசாலையாக அழகுற அமைய வழிவகுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி முடிக்கின்றேன்.

**உண்மை வெல்லும்**

# யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி

## பரிசளிப்பு விழா – 2012

## மாணவர்களிற்கான புலமைப்பரிசில்

1. தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் ( மருத்துவம்)
   செல்வி. ஈசன் இரஞ்சினி

2. அமரர் க. சிவபாதசுந்தரம் (பொறியியல்)
   செல்வன். ரஞ்சன் நிரோஜன்

3. அமரர் வ. சிவஞானம் (கலை)
   செல்வி.தனுஷா இராசரத்தினம்

4. பொதுநிதியம் (ஏனைய துறைகள்)
   செல்வன். கந்தசாமி சிவச்சந்திரன் ( முகாமைத்துவம்)

5. அமரர் ஆ. சுப்பிரமணியம் ( நுண்கலை)
   செல்வி. நிருஷா தங்கராசா

6. அமரர் வெ. சபாநாயகம் (வறுமை)
   1. செல்வி. ஆர்த்தியா இராஜரட்ணம்
   2. செல்வி. மேரி ஜெனிற்றா சிங்கராசா

7. அமரர் சி.கெங்காதரன்
   1. செல்வன்.தனபாலசிங்கம் துவாரகன்
   2. செல்வி. வர்மிலா செல்வராஜா
   3. செல்வன். பரம்சோதி தியாளன்

8. அமரர் க.தணிகாசலம்
   செல்வி. யமீலா முகுந்தன்

9. அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார்
   1. செல்வன். பண்பழகன் நிருஷன்
   2. செல்வி. நிர்த்தனா நிமலராஜன்

10 அமரர் குவிதா சிவசுதன்
   1. கனிஷ்ட பிரிவு சிறந்த மாணவர் செல்வி. நிதர்சனா சிவகுமார்
   2. சிரேஷ்ட பிரிவு சிறந்த மாணவர் செல்வன். செல்வராசா சுதன்

11. அமரர் சின்னத்தம்பி வேலாயுதம்

   Excellence in Sports 2012

   செல்வன் சுப்பிரமணியம் ரஜீவ்குமார்

12. அமரர் கௌரி மனோகிரி குலவரதராஜா

## Excellence in Academic

செல்வன் செல்வராஜா மயூரன்

**தேசிய, மாகாண,மாவட்ட மட்டங்களில் சாதனை படைத்த மாணவர் விபரம்**

**தேசிய மட்டம்**

1. அகில இலங்கை சைவநெறித் தேர்வு (தரம் 12) 2012 தேசிய நிலை
   1ம் இடம் - செல்வி பிரியங்கா செந்தமிழ்ச்செல்வன்
2. அகில இலங்கை சைவநெறித் தேர்வு (தரம் 12) 2012 தேசிய நிலை
   2ம் இடம் - செல்வி.கீதாஞ்சலி சீவரத்தினம்
3. வனஜீவராசிகள் அமைச்சரால் நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டி
   3ம் இடம் - இரஞ்சினி ஈசன்

**மாகாண மட்டம் (தமிழ்த்தினப்போட்டி)**

1. பிரிவு 5 இலக்கியத்திறனாய்வு
   லோகேஸ்வரன் தேனுஷா 1ம் இடம்

**மாவட்ட மட்டம் (தமிழ்த்தினப்போட்டி)**

1. பேச்சு பிரிவு 5 இரண்டாமிடம்
   செல்வி.தவராசா சிந்துஜா
2. பாவோதல் பிரிவு 3 மூன்றாம் இடம்
   செல்வி நிதர்சனா சிவகுமார்

**மாவட்ட மட்டம்**

19 வயதுப் பிரிவு – பெண்கள், காற்பந்தாட்டம் - இரண்டாமிடம்

1. ஈ தர்சினி
2. உ.சரண்யா
3. து.சுகிர்தா
4. ச.சரண்யா
5. யோ.எழிலரசி
6. ஆ.மணிமேகலா
7. ஜெ.விதுர்ஷா
8. க.காயத்திரி
9. நா.ரம்மியா
10. பி.தர்ஷிகா
11. ந.பிரியதர்சினி
12. த.ரதீனா

## கல்லூரி கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறைகாயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக்கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ் தன் ஊற்றிடமாகக்
திறன் பணி கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

வர்த்தக இயலும் தொழில்முறைக்கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே வளர்க)

எண்ணொடு எழுத்தும் என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதை கூறிடுவோம்.
(வாழ்கவே வளர்க)